இருக்கிறோம். ஆனால் வந்தவாசியில் கோட்டையின் பழமையையும், வரலாற்றுச் சின்னங்களையும் காப்பாற்றும் அளவில் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை ஈடுபட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அமைச்சரின் அறிக்கை.

ஒரு துணை வினாவிற்கான விடையைத் திருத்தி கல்வி-சுற்றுலா அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 32- விதியின் கீழ் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நேற்று கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள், 'தமிழ்நாட்டு வரலாற்றை எழுதிப் புதைத்து வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?' என்று தமிழ்நாட்டு வரலாற்றைப் பதிப்பிக்கும் நோக்கம் இருக்கிறதா ? என்று கேட்கிறார் என்று எண்ணிக்கொண்டு 'இந்தக் குழுவின் பணியே அதுதான்' என்று விடையிறுத்தேன். ஆனால் எல்லாப் பத்திரிகைகளிலும் கேள்வி ஒன்றாகவும், நான் சொன்ன பதில் வேறொன்றாகவும், வினாவுக்கும் விடைக்கும் தொடர்பு இல்லாத முறையிலே வெளியிடப்பட்டிருப்பதால் அதுபற்றித் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்றை எழுதுவது வெளியிடுவதற்கே தவிர, புதைத்து வைப்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் கேள்வி கேட்டிருப்பதிலும் அவர் 'இந்திய சரித்திரத்தை எழுதி மத்திய அரசினர் புதைத்து வைத்திருக்கிறார்களே' என்பதிலும் உண்மை இல்லை. 1947-ம் ஆண்டு முதல் இதுவரை சிறப்பான வரலாற்றுக் குறிப்புகளை எழுதி வைத்து வேறுபல பொருள்களையும்

அதனுடன் வைத்து புதைத்து வைத்திருக்கிறார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் பார்க்க வேண்டுமென்ற முறையிலே புதைத்து வைத்திருக்கிறார்கள். அதிலே என்ன இருக்கிறது என்று உறுப்பினர்கள் கேட்கிறார்கள் என்று மத்திய அரசை எழுதிக் கேட்டால் அதுபற்றிய விவரங்களை அனுப்ப முடியாது என்று பதில் எழுதிவிட்டார்கள்.

நாம் வரலாற்றை எழுத புதைந்து கிடப்பதை எல்லாம் தோண்டிக் கொண்டிருக்கிறோம். அகழ்ந்தெடுத்து வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து வரலாற்றை எழுதுகிற நிலைமையில் இருக்கிறோம். எழுதப்படுகிற வரலாற்றைப் பதிப்பித்து வெளியிட வரலாற்றுக் குழுவினர் கருதுகிறார்களே தவிர, புதைத்து வைப்பதற்காக அல்ல. ஆகவே, வினாவுக்கும் விடைக்கும் தொடர்பு இல்லாத நிலைமையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. பி. கோபால் : தலைவர் அவர்களே, தொடர்ந்து பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அமைப்பு 1947-ல் ஆரம்பிக்கப்பட்டது. காங்கிரஸ் 20 ஆண்டுக் காலம் ஆட்சி செய்தபோதும் ஆசிரியர் கூட்டணி பல கோரிக்கைகளை வைத்தன. அவர்கள் கோவையில் 20—1—73-ம் தேதி மாநில வெள்ளி விழா மாநாடு என்று ஏற்பாடு செய்து அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைப்பு என்பதை எடுத்துக் காட்டும் வகையில் நமது கல்வியமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும், கோவை நகரசபைத் தலைவர் அவர்களையும் விழாவுக்கு அழைத்திருந்தார்கள். அப்படி அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் 25 ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகின்ற அமைப்பு இருக்கும் போது சமீப காலத்தில் 'ஆசிரியர் கழகம்' என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற அரசின் குறிக்கோளுக்கும் கொள்கைக்கும் முரண்பாடாக இருக்கிறது. இந்த அரசு முன்மாதிரியாக வழிகாட்ட வேண்டிய நிலைமையில் இருக்க வேண்டாமா?